DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1037/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : சிவக்குமார்

Father's Name : காளியப்பன்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து கணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் வாங்கப்பாளையத்தில் குடியிருந்து எஸ்கே காஜா பட்டன் என்ற பெயரில் கடை வைத்துள்ளேன். ஜமுனா எனது மனைவி எனக்கு உதவியாக உள்ளார். கடந்த 09.09.2025ம் தேதி மதியம் 12.00 மணியளவில் எனக்கு சொந்தமான TN 67 P 7506 என்ற ஓம்னி வாகனத்தை சொந்த உபயோகத்திற்காக வாங்கி ஓட்டி வந்தேன். அதை கடைக்கு பக்கத்திலுள்ள

சந்தில் நிறுத்திவிட்டு, மறுநாள் காலை சுமார் 09.00 மணியளவில் எப்போதும்போல வாகனத்தை வந்து பார்த்தபோது காணவில்லை. அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை. 12.09.2025 ம் தேதி கரூர் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர். அன்றைய தினம் மதியம் போலிசார் வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாக வரச் சொன்னதன்பேரில் காவல் நிலையம் சென்றேன். அங்கு என்னுடைய ஓம்னி காரை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள TN 67 P 7506 என்ற ஓம்னி வாகனம் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஓம்னி வாகனத்தை திருடிய நபர் காவல் நிலையத்தில் இருந்தார். அந்த நபர் இன்று காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார். காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்ட அந்த நபர்தான் என்னுடைய ஓம்னி வாகனத்தை திருடியதாகவும், அவரிடமிருந்து கைப்பற்றியதாக போலிசார் கூறினர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

TN 67 P 7506 என்ற ஓம்னி வாகனத்தின் அசல் ஆர்.சி. புத்தகம் என்னிடம் உள்ளதா என்றால் இருக்கிறது. வாகனம் திருடுபோன சமயத்தில் அந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இருந்ததா என்றால் இல்லை. 09.09.2025 அன்று இரவு வாகனத்தை நிறுத்திவிட்டு 10.09.2025 அன்று எனது வாகனத்தை சென்று பார்த்தபோது வாகனம் காணவில்லை. 12.09.2025 அன்று காலை நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக் கொண்டனர். எனது வாகனத்தை எனது கடைக்கு கொஞ்ச தூரத்தில் 09.09.2025 அன்று மதியம் நிறுத்தியிருந்தேன். நான் வாகனத்தை நிறுத்திய இடமானது பொதுவான சாலை என்றால் சரிதான். வாகனத்தை நிறுத்தியிருந்த இடத்திற்கு பக்கத்தில் இருந்த கட்டடங்களில் சிசிடிவி

கேமராக்கள் உள்ளதா என்றால் உள்ளது. என்னுடைய வாகனத்தை யார் திருடியது என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் எதற்காக ஏற்பட்டது என்றால் நான் அக்கம் பக்கத்தில் உள்ள இடங்களில் தேடிப் பார்த்தேன். நான் எனது வாகனத்தை எந்தெந்த இடங்களில் தேடிப் பார்த்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. வாகனம் காணாமல் போனது குறித்து இன்சூரன்ஸ் நிறுவனம் மற்றும் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் எதிரியை கைது செய்த போது நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கு அழைத்து வந்த பிறகுதான் பார்த்தேன். ஓம்னி வாகனத்தை கைப்பற்றும்போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். போலிசார் எதிரிதான் வாகனத்தை எடுத்ததாக சொன்னதன்பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் எதிரியை அடையாளம் காட்டுவதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எனது வாகனத்தை ஓட்டியதையும், அவர் வைத்திருந்ததையும் நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் எதிரியை தெரியும் என்றால் சரிதான். போலிசார் எதிரிதான் வாகனத்தை திருடியதாக சொன்னதைத் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி எனது வாகனத்தை திருடவில்லை என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1037/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | ஜமுனா |
| Husband's Name | : | சிவக்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து கணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் வாங்கப்பாளையத்தில் குடியிருந்து அ.சா.1 எனது கணவர் வைத்திருக்கும் எஸ்கே காஜா பட்டன் கடையில் உதவியாக இருந்து வருகிறேன். கடந்த 09.09.2025 ம் தேதி மதியம் எனது கணவர் அ.சா.1 எங்களுக்கு சொந்தமான TN 67 P 7506 என்ற ஓம்னி வாகனத்தை சொந்த உபயோகத்திற்காக வாங்கி ஓட்டி வந்தார். அதை கடைக்கு பக்கத்திலுள்ள சந்தில்

நிறுத்திவிட்டு, மறுநாள் காலை சுமார் 09.30 மணியளவில் எப்போதும்போல எனது கணவர் அ.சா.1 கடையை திறக்க சென்றபோது, நிறுத்தி வைத்திருந்த ஓம்னி வாகனத்தை காணவில்லை இன்று எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர், அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தாக கூறினார். இது சம்மந்தமாக 12.09.2025 ம் தேதி கரூர் நகர காவல் நிலையம் சென்று எனது கணவர் அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர். அன்றைய தினம் மதியம் போலிசார் வாகனம் கிடைத்துவிட்டதாக வரச் சொன்னதன்பேரில் நான் எனது கணவருடன் காவல் நிலையம் சென்றேன். எங்களுடைய வாகனத்தை எனது கணவர் அடையாளம் காட்டினார். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள வாகனம் எங்களுடையது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 எனது கணவருடன்தான் வாழ்ந்து வருகிறேன். திருடப்பட்டதாக சொல்லப்படும் ஓம்னி வேன் யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய கணவர் பெயரில் இல்லை. உரிமையாளர் பெயரில் உள்ளது. மேற்படி வாகனம் என்னுடைய கணவருடையதுதான் என்பதை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் பெயர் மாற்றம் செய்ததற்குண்டான படிவம் உள்ளது. 09.09.2025 அன்று மதியம் எனது கணவர் ஓம்னி வாகனத்தை நிறுத்திவிட்டு வந்தார். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. எதிரி மேற்படி வாகனத்தை திருடியதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. வாகனம் காணாமல் போனது பற்றி எனது கணவர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 12.09.2025 அன்று போலிசார் என்னை விசாரித்தனர். எனது கணவர் சொன்னதைத்தான் நான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது நான் உடனிருந்தேன். புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் எதற்காக ஏற்பட்டது என்றால் எனது கணவர் அக்கம் பக்கத்தில் உள்ள இடங்களில் தேடிப் பார்த்தார். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் எதிரியை தெரியும் என்றால் சரிதான். போலிசார் எதிரிதான் வாகனத்தை

திருடியதாக சொன்னதைத் தவிர வேறு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி எங்களது வாகனத்தை திருடவில்லை என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பு எதிரியை தெரியாது என்றால் சரிதான். வாகனம் கைப்பற்றியபோது நான் நேரில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி திருடு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனது கணவர் கூறியதன் அடிப்படையில்தான் வழக்கு விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். எதிரி எங்களது வாகனத்தை திருடவில்லை என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1037/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணகாந்த் |
| Father's Name | : | சேகர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து கணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் வாங்கப்பாளையத்தில் குடியிருந்து நிர்மலா மருத்துவமனை அருகில் காஜா பட்டன் கடை வைத்துள்ளேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 09.09.2025 ம் தேதி மதியம் அ.சா.1 கடைக்கு அருகே ஓம்னி வாகனம் TN 67 P 7506 என்ற ஓம்னி வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றதாகவும், மறுநாள் காலை சுமார் 09.00 – 09.30 மணியளவில் வந்து பார்த்தபோது, ஓம்னி வாகனத்தை

காணவில்லை என்று எனக்கு சொன்ன தகவலை கேள்விபட்டு, சம்பவ இடம் சென்று பார்த்தேன். பின்னர், பல இடங்களில் தேடிப் பார்த்தோம். நானும் தேடி பார்த்தேன். 12.09.2025ம் தேதி அ.சா.1 கொடுத்த புகாரின்பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

அ.சா.1 சிவக்குமாரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரியை போலிசார் அடையாளம் காட்டுவதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகனம் திருடப்பட்டதாக சொல்லும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சிசிடிவி மூலமாக தெரிந்து கொண்டேன். 09.09.2025 அன்று மதியம் வாகனமானது கடைக்கு பக்கத்தில் மெயின் ரோட்டில் நிறுத்தப்பட்டது. வாகனம் காணாமல் போனது அனைத்தும் அ.சா.1 சிவக்குமார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். 12.09.2025ம் தேதி போலிசார் என்னை விசாரித்தனர். நானும் சேர்ந்துதான் வாகனத்தை தேடினேன் என்றால் சரிதான். அ.சா.1 உடன் நான் காவல் நிலையம் சென்றேன். எதிரியை கைது செய்யும்போது, வாகனத்தை கைப்பற்றும்போதும் நான் அங்கிருந்தேனா என்றால் எதிரியை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்த பிறகு நான் அங்கிருந்தேன். அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1037/2025

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | ஜான் பீட்டர் |
| Father's Name | : | அந்தோணி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.02.2026.

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து கணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் நீலிமேட்டில் குடியிருந்து அ.சா.1ன் கடையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் நகுல்சாமி என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 12.09.2025ம் தேதி காலை சுமார் 07.00 – 07.30 மணியளவில் கரூர் போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப்

பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், நகுல்சாமியும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

எனக்கும், அ.சா.1 க்கும் இடையே எந்த நட்பும், உறவுமுறையும் இல்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. போலிசார் படம் வரைந்ததற்காக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். 12.09.205 அன்று காலை 07.00 – 07.30 மணியளவில் போலிசாரிடம் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசாரிடம் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் சொன்னார்கள், அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் நல்லுசாமி என்பவர் கையொப்பம் செய்தார். ஏற்கனவே தயார் செய்திருந்த தாளில்தான் நான் கையொப்பம் செய்தேனா என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**